**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**STC.NO-259/2024**
**Dated :26.05.2026**
**Deposition of witness for : P.W.6**

**LW9 Examined as PW6 (IO)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மரியதாஸ் | வயது | : | 52 |
| தந்தை பெயர் | : | தேவராஜ் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | புதுக்கோட்டை | தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Accused absent. Counsel present.**
**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4 ஆம் எதிரி ஆஜர் இல்லை. அவர்களது சார்பில் பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது). )

**முதல் விசாரணை**

1) நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், மாவட்ட குற்றப்பிரிவில் உதவி ஆய்வளாராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 18.10.2023 ஆம் தேதி ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது எனக்கு முன்பு பணியில் இருந்த, உதவி ஆய்வாளர் அருணகிரி என்பவர் நிலைய குற்ற எண் 121/2023 இல் சட்டப்பிரிவுகள் 294(b), 323, இதச ன் கீழான வழக்கினை முதல்விசாரணை செய்து அவருக்கு பணிமாறுதல் வந்துவிட்டதால் வழக்கு கோப்பினை என்னிடம் ஒப்படைத்தார்.

2) நான் வழக்கினை விசாரணைக்கு எடுத்துகொண்டு 18.10.2023 ஆம் தேதி புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று அ.சா.1-க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விவேக்ராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அ.சா.1-க்கான விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று வந்தேன். **(மேற்படி விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று முறையே அ.சா.ஆ5 மற்றும் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**சாட்சியின் கையொப்பம்** **மா.உ/நீ.ந**

3) இத்துடன் இந்த விசாரணையை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு எதிரிகளுக்கு எதிராக 294(b), 323 இதச கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் புலன் விசாரணை செய்த இவ்வழக்கிற்கு ஒரு எதிர் வழக்கு உள்ளது என்பதை நான் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அந்த CC 58/2024 வழக்கிலும் குற்ற இறுதி அறிக்கை நான் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். CC 58/2024 வழக்கின் புகார்தாரர் போதுமணி இவ்வழக்கின் 1 வது எதிரி என்றால் சரிதான். CC 58/2024 வழக்கின் சம்பவம் போதுமணி வீடு என்றால் சரிதான். அந்த வழக்கின் 1, 2 எதிரிகள் வீட்டிற்குள் நுழைந்து பெண்களுக்கு எதிராக குற்றம் செய்ததாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 1 வது எதிரி வீட்டிற்கு எதிரே சாலை உள்ளது என்றால் சரிதான். எனது விசாரணையின் படி மேற்படி சாலையில் வந்ததால் அந்த வழக்கின் எதிரிகள் வீட்டிற்குள் வந்துள்ளார்கள் என்றால் சரிதான். 2 வழக்குகளில் ஒரு வழக்கு தவறு என்றும், எனது புலன் விசாரணையின் அடிப்படையில் எனது தெரியவரவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவரை தவிர வேறு சாட்சிகளிடம் தனியாக வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். 2 வழக்குகளில் குற்ற செயல் முதலில் யாரால் நடைபெற்றது என்பதை தெரிந்து கொள்வதற்காக நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றால் சரிதான். நான் ஆவணங்களின் அடிப்படையில் 21.09.2023 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்பதை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துமனையிலிருந்து 21.09.2023 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் தகவல் வந்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நேர மாறுபாடு எனது புலன்விசாரணையில் எந்த ஒரு சந்தேகத்தையும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். மருத்துவர் எனது விசாரணையில் அ.சா.1யை நான்கு நபர்கள் தாக்கிவிட்டதாக அ.சா.1 அவரிடம் சொன்னதாக வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் சரிதான். மற்ற சாட்சிகள் உதவி ஆய்வாளர் அருணகிரி விசாரணையில் நான்கு நபர்கள் தாக்கியதாக சொல்லவில்லை என்றால் நான் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை. உதவி ஆய்வாளர் அருணகிரி பதிவு செய்த வாக்குமூலம் எதையும் நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் படித்து பார்த்தேன். எங்கள் காவல் நிலையத்தில் பாதிக்கப்பட்ட நபர்கள் மீது வழக்கு பதிவு செய்வது வழக்கம் என்றால் சரியல்ல. நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரியல்ல. நான் சொல்வது போல எதிரிகள் எந்த ஒரு குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை–இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.05.26 14:45:33 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**

**சாட்சியின் கையொப்பம்** **மா.உ/நீ.ந**